


தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மகாலில் மாவட்ட அவைத்தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, சரவணன், முத்துச்செல்வி, செண்பக விநாயகம், ராஜதுரை, மனோகரன், புனிதா, சாகுல் ஹமீது, பராசக்தி மகேஸ்வரி, மாரிசாமி, வழக்கறிஞர் து. சண்முகையா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி கலைஞர் அரங்கில் (26.09.2024) அன்று நடைபெற்ற தூத்துக்குடி வடக்கு மாவட்ட மற்றும் மாநகர தி.மு.க. விவசாய அணி ஆலோசனைக் கூட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பெ. கீதாஜீவன் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் திருப்பரங்குன்றம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம், தூத்துக்குடி மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், கோவில்பட்டி நகரமன்ற தலைவரும் நகரக் கழகச் செயலாளருமான கருணாநிதி, கோவில்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் பீக்கிலிபட்டி முருகேசன், கோவில்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், கயத்தார் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்ன பாண்டியன், கயத்தார் மேற்கு ஒன்றிய செயலாளர் சுப்பிரமணி, கயத்தார் மத்திய ஒன்றிய செயலாளர் கருப்பசாமி, கழுகுமலை பேரூர் கழக செயலாளர் கிருஷ்ணகுமார், கயத்தார் பேரூர் கழக செயலாளர் சுரேஷ் கண்ணன், கடம்பூர் பேரூர் கழக செயலாளர் பாலகுமார், விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, புதூர் பேரூர் கழகச் செயலாளர் மருதுபாண்டியன், தூத்துக்குடி பகுதி கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட, மாநகர விவசாய அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சராகி முதல் முறையாக

# மதுரை வருகை தரும் உதயநிதி ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு!

## மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் அறிக்கை!





மதுரை, செப். 30 -

கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு துணை முதல்வராக பொறுப்பேற்று முதல் முறையாக இன்று (30ஆம் தேதி) மதுரையில் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க வருவதையொட்டி இன்றைய தினம் மதுரை விமான நிலையத்தில் மதுரை மாவட்ட திமுக சார்பில் பிரமாண்ட வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர்கள் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

நாடு போற்றும் நம் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க சுற்றுப் பயணம் சென்று தமிழ்நாட்டில் அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் புதிய தொழில் முதலீடுகளை பெற்று வந்தார். இதை நாடே போற்றியது, தலைவரின் வழியில் நம் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் முதல்வரின் நலத்திட்டங்களை முழுமையாக செயல்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை முழு அர்ப்பணிப் போடு மேற்கொண்டார். தனக்கு கொடுக்கப்பட்ட அனைத்து பணிகளையும் சிறப்பாக செயல்படுத்திய தன் பலனாக கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நற்பெயரும், பாராட்டும் பெற்று துணை முதல்வராக அறிவிக்கப்பட்டார்.

இதனை கழகத்தினரும், பொதுமக்கள் அனைவரும் பெரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வரும் நிலையில் துணை முதல்வராக பதவியேற்று முதன் முறையாக இன்று சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க 30.9.2024 திங்கள் கிழமை இரவு 7.15 மணியளவில் விமான மூலம் மதுரை வருகிறார்.

அவருக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் அனைவரும் ஒன்று திரண்டு முரசு கொட்டு முழங்க பிரமாண்ட வரவேற்பு கொடுக்க உள்ளதால் கழகத்தினர் திரளாக பங்கேற்று, கையில் இரு வண்ண கொடியேந்தி வரலாறு காணாத வகையில் பிரமாண்ட வரவேற்பு கொடுத்திட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில்

# கழகப் பொறியாளர் அணிப் பொறுப்புகளுக்கு விண்ணப்பம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, செப். 30-

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அளவிலான பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்டச் செயலாளர் அமைச்சர் அனிதாR.ராதாகிருஷ்ணன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அளவிலான அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பம் வழங்கலாம்.

தி.மு.க தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி. தி.முக பொறியாளர் அணியின் பொறுப்புகளுக்கு பொறியாளர் அணி போர்ட்டலில் (Qr Code இணைக்கப்பட்டுள்ளது) நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் செய்பவர்கள் பொறியியல், பட்டயம், ஐடிஐ படித்தவர்களாக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாக்காளர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பிற்கு உரிய தகுதியுள்ள ஒரு அமைப்பாளர் 5 துணை அமைப்பாளர்கள் தேர்வு செய்யப்படும்.

இந்த அடிப்படையில் விருப்பமுள்ள பொறியியல் பட்டதாரிகள் டிப்ளமோ படித்தவர்கள் ஐடிஐ படித்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

Or Code மூலம் பொறியாளர் போர்ட்டல் வழியாக மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழகம் அறிவிப்பு

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளரும் - கே.மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவருமான எம்.சரவணன் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும். கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### வேலூர் மாவட்ட தி.மு.க.விற்கு

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக மாணவரணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவிப்பு!



வேலூர், செப். 30 -

வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு”

வேலூர் மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கான நேர்காணல் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ஆகிய எனது தலைமையில் நாளை 01.10.2024 செவ்வாய்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் மாநில மாணவரணி இணைச் செயலாளர் பூவை.சி. ஜெரால்டு மற்றும் துணைச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில், நேர்காணல் நடைபெற உள்ளது. இந்நேர்காணலில் வேலூர் மாவட்ட அவைத்தலைவர், தலைமை தணிக்கை குழு உறுப்பினர் தி.அ.முக மதுசகி அவர்கள், வேலூர் மாநகர செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ ஆகியோர் உள்ளிட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொள்ள உள்ளார்கள். முன்னதாக மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்ற உள்ளார்.

எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்த வர்கள் தவறாமல் நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நாகர்கோவில் மாநகராட்சியில் மாமன்ற கூட்டம்!

## மாவட்ட செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், செப். 30 -

நாகர்கோவில் மாநகராட்சி, இயல்பு மாமன்ற கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் வைத்து (27.09.2024 - வெள்ளிக்கிழமை) அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.



நாகர்கோவில் மாநகராட்சி, இயல்பு மாமன்ற கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் மேரி பிரின்சி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் உதவி ஆணையாளர் பாலசுந்தரம், மாநகர் நல அலுவலர் மருத்துவர். ராம்குமார், மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் மேரி பிரின்சி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள், மேலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் தெருவிளக்குகள் அமைத்தல், குடிநீர் விநியோகம், குடிநீர் குழாய் உடைப்புகள் சரி செய்தல் போன்ற அடிப்படை தேவைகளுக்கான கோரிக்கைகள் மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. நாகர்கோவில் மாநகராட்சி 1, 2, 3, 50, 51, 52 ஆகிய வார்டுகளில் குடிநீர் திட்டத்திற்காக ரூ. 64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணி வருகிற 30ம் தேதி முதல் தொடங்கப்படும் எனவும், நாகர்கோவில் மாநகர பகுதியில் தூய்மை பணியாளர்கள் போதுமான அளவு இல்லாததால் கூடுதலாக தூய்மை பணியாளர்களை நியமிக்க வேண்டும் என மாமன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் உதவி ஆணையாளர் பாலசுந்தரம், மாநகர் நல அலுவலர் மருத்துவர். ராம்குமார், மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மடுவை அ.துரை

**செப்டம்பர் 30 (2020)**



**தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.**

**தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**